## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், முதுகுளத்தூர்.

**O.S.No.52 /2018**

2022ம் ஆண்டு ஜுன் திங்கள் 15ம் நாள் வாதி / பிரதிவாதி தரப்பில் சாட்சி வாக்குமூலம் 1983ம் ஆண்டு 1வது விதியின் ஏற்பாட்டின்படி உதவியாளரால் பிரமாணம் செய்யப்படுகிறது. உறுதி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திருமதி.கலைச்செல்வி | தாலுகா | : முதுகுளத்தூர் |
| த/ பெயர் | : | கிராமம் | : விளங்குளத்தூர் |
| க/ பெயர் | : இரவி | | |
| வயது | : 40 | மதம் | : இந்து |
| தொழில் | : விவசாயம் | ஜாதி | : கம்மாளர் |

<u>வா.சா.</u> 1
நாள் : 15.06.2022
நேரம் : 11.30 A.M
<u>முதல் விசாரணை</u>

நான் இவ்வழக்கின் வாதியாவேன். வாதி தரப்பு சாட்சி 1ஆக எனது தரப்பு முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நான் சொன்ன விபரத்தின் அடிப்படையில் தான் நிரூபண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது. படித்துப் பார்த்து கையொப்பம் செய்தேன். எனது முதல் விசாரணையை ஏற்றுக் கொள்ளுமாறு வணக்கமாய் பிரார்த்திக்கிறேன்.

தாவா 1வது சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் குருசாமி ஆசாரி பெயரில் தாக்கலான **G.R விட்டுமனை சிட்டா சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது ( D2 and D5 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் இந்த ஆவணத்தை குறியீடு செய்ய ஆட்சேபணை தெரிவித்தார், ஆட்சேபணையின் பெயரில் குறியீடு செய்யப்படுகிறது )**

x R.Kalaiselvi

தாவாச் சொத்துக்களை 1ம் பிரதிவாதி அவரது தந்தை அவ[illegible] சகோதரர்கள் சேர்ந்து எழுதிக் கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது

தாவா 1வது இலக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த மோசடி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.890/2013 வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது

தாவா 2வது இலக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த மோசடி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.116/2011 வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது

தாவா 3வது இலக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி 3ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த மோசடி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.1657/2013 வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது

தாவா சொத்தை 5ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த மோசடி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண்.654/2017 வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது

தாவா சொத்திற்கு கணிணி மூலம் பெறப்பட்ட அரசு வழிகாட்டுதல் சொத்து மதிப்பு நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர்கள் வேண்டுகோளின்படி வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

<u>விசாரணை முடிவுற்ற நேரம் 11.50 A.M</u>

R.Kalaiselvi

சாட்சியின் கையொப்பம்

Taken down by me in open Court read over to the witness and admitted by him to be Correct.

15/[illegible]

District Munsif
[illegible]

# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்

## முதுகுளத்தூர்

## O.S.No: 52 /2018

கலைச்செல்வி - வாதி

-எதிர்-

1) (லேட்) சுப்பிரமணி ஆசாரி
2) முத்துராமன்
3) சண்முகம்
4) பெத்தம்மாள்
5) பாகம்பிரியாள் - பிரதிவாதிகள்
6) சார் பதிவாளர், முதுகுளத்தூர்
7) ரெத்தனம்மாள்

ஷை வாதி தரப்பு 1-வது சாட்சியான (PW1)-ஆல் அதிக வணக்கமாய் சி.பி.சி கட்டளை 18 விதி 4(1)-ன் படி தாக்கல் செய்து கொண்ட முதல் விசாரணை வாக்குமூலம்.

இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம், விளங்குளத்தூர் அஞ்சல், விளங்குளத்தூர் கிராமத்தில் வசித்து வரும் ரவி மனைவி இந்து, விவசாயம், சுமார் 30 வயதுள்ள கலைச்செல்வி ஆகிய நான் உண்மை பிரமாணத்தின் பேரில் எழுதி வைத்த முதல் விசாரணை வாக்குமூலம்.

1. நான் மேற்படி வழக்கில் வாதி, வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன்.

2. தாவாச்சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு அவரத தகப்பனார் 1) குருசாமி ஆசாரி, 1ம் பிரதிவாதியின் சகோதரர்கள் 2) கணேசன், 3) நாகராஜன், 4) கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் கடந்த 21.11.1969ம் தேதி பதிவு பாகப்பிரிவினை செய்துகொண்டதன் மூலம் தாவாச்சொத்துக்கள் கிடைக்கப்பெற்றது. தாவாச்சொத்துக்கள் 1ம் பிரதிவாதிக்கு பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற ஆவண எண் 2138/1969 என 6ம் பிரதிவாதி அலுவலகத்தில் பதிவாகியுள்ளது. இவ்வாறு பூர்வீக தாவாச்சொத்துக்கள் பாகப்பிரிவினை மூலம் 1ம் பிரதிவாதிக்கு கிடைக்கப்பெற்ற காலம் முதல் 1ம் பிரதிவாதி அனுபவம் செய்து வந்தார். அதன் பிறகு நான் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள் என்ற முறையில்

R.Kalaiselvi

அனைவரும் சேர்ந்தே வரிவகையறா செலுத்தி பாகம் பிரிக்காமல் பொதுவாக தற்போதுவரை வைத்து அனுபவம் செய்து வருகின்றோம். இந்நிலையில் நான், பிரதிவாதிகள் அவரவர்கள் திருமணம் செய்து தனித்தனியாக குடும்ப வாழ்க்கை நடத்தி வருவதாலும் குடும்ப வரவு செலவுகள் அனைத்தையும் தனித்தனியாக செய்து வருவதாலும் இனிமேலும் தாவாச்சொத்துக்களை பொதுவாக வைத்து அனுபவம் செய்ய விரும்பாத நான் தாவாச்சொத்தில் உள்ள எனது பாகத்தை பரித்து தரச்சொல்லி கேட்டதில் பிரித்து தருவதாக சொல்லி 1ம் பிரதிவாதி வீண் காலம் கடத்தி வருகிறார். தாவாச்சொத்துக்களில் எனக்கு 1/5 பங்கு பாக பாத்தியமாகும்.

3) நான், தாவாச்சொத்துக்களில் உள்ள தனது பாகத்தை பிரித்து தரக்கேட்டு பிரதிவாதிகளிடம் அடிக்கடி கேட்டும் ஏதோ சாக்குபோக்கு சொல்லி காலம் கடத்தி வந்ததால் சந்தேகமடைந்த நான் தாவாச்சொத்து சம்மந்தமாக கனினில் வில்லங்கம் போட்டு பார்த்ததில் தாவாச்சொத்துக்கள் சம்மந்தமாக இனாம் செட்டில்மென்ட் ஆவணங்கள் ஏற்பட்ட விபரம் தெரிய வந்து அதிர்ச்சியடைந்த நான் கடந்த 06.01.2018ம் தேதி தாவாச்சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்பட்ட ஆவணங்களை **SRO** நகல் எடுத்து பார்த்தபோது எனக்கு தெரிய வந்தது.

4) தாவா 2வது லக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கடந்த 07.02.2011ம் தேதி முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 116/2011-ன் படி மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஓர் இனாம் செட்டில்மென்ட் மூலமும், தாவா 3வது லக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு கடந்த 30.11.2011ம் தேதி முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 1567/2011-ன் படி மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஓர் இனாம் செட்டில்மென்ட் மூலமும், தாவாச்சொத்துக்களில் 1வது லக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு கடந்த 13.08.2013ம் தேதி முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 890/2013-ன் படி மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஓர் இனாம் செட்டில்மென்ட் மூலமும் பதிவு செய்து கொடுத்துள்ளார். மேற்படி மோசடி ஆவணங்களின் தொடர்ச்சியாக 2ம் பிரதிவாதி அவரது மனைவியான 5ம் பிரதிவாதிக்கு தாவாச்சொத்துக்களில் 1,2 லக்கச் சொத்துக்களை கடந்த 26.07.2017ம் தேதி முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 654/2017-ன் படி மோசடியாக பதிவு செய்யப்பட்ட ஓர் இனாம் செட்டில்மென்ட் மூலமும் பதிவு செய்து கொடுத்துள்ளார்.

5. தாவாச்சொத்துக்கள் சம்மந்தமாக நான், 1 முதல் 4 பிரதிவாதிகளுக்குள் பாகம் பிரிக்கப்படாத நிலையில் தாவாச்சொத்துக்கள் சம்மந்தமாக 1 முதல் 3, 5 பிரதிவாதிகளுக்கு இடையே ஏற்பட்ட இனாம் செட்டில்மென்ட் ஆவணங்கள் மோசடியானவை மற்றும் செல்லதக்கதல்ல. மேலும்

D. Valli Selvi

படி ஆவணங்கள் ஊர்ஜிதத்திற்கு வராத ஆவணங்கள் ஆகும். தாவாச்சொத்துக்கள் நாளது தேதிவரை எனது, 1 முதல் 4 பிரதிவாதிகளின் கூட்டு பாத்திய அனுபவத்திலேயே இருந்து வருகிறது. மேற்படி மோசடியான ஆவணங்களால் எனக்கு கிடைக்க வேண்டிய பாகம் கிடைக்காமல் போய்விடும் சூழல் ஏற்பட்டுள்ளது. தாவாச்சொத்துக்களில் எனக்கு 1/5 பங்கு பாகபாத்தியமாகும்.

6. தாவாச்சொத்துக்களை பாகம் பிரிக்காமல் நான் மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வரும் நிலையில் தாவாச்சொத்துக்கள் சம்மந்தமாக 1 முதல் 3, 5 பிரதிவாதிகள் தங்களுக்குள் மோசடியாக இனாம் செட்டில்மெண்ட் ஆவணங்கள் எழுதி பதிவு செய்திருப்பது நில மோசடி மற்றும் ஆவண மோசடி குற்றங்களுக்கு ஆளாகும் செயலாகும். எனவே நான் கடந்த 11.03.2018ம் தேதி பெரியோர்கள் முன்னிலையில் 1 முதல் 5 பிரதிவாதிகளிடம் தாவாச்சொத்துக்கள் சம்மந்தமாக ஏற்பட்ட ஆவணங்கள் குறித்து கேட்டதில் மேற்படி மோசடி ஆவணங்கள் குறித்தோ, எனக்கு கொடுக்கவேண்டிய பாகம் குறித்தோ 1 முதல் 5 பிரதிவாதிகள் யாதொரு முறையான பதில் கூறாமல் சென்றுவிட்டார்கள்.

7. எனவே தாவாச்சொத்துக்களை இனிமேலும் பொதுவில் வைத்து அனுபவம் செய்ய இயலாது என்று எண்ணிய நான், 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் தாவாச்சொத்துக்களில் என்னுடைய பாகத்தினை பிரித்துக்கொடுக்குமாறு கூறி 1 முதல் 4 பிரதிவாதிகளை இறுதியாக கடந்த 10.04.2018ம் தேதி அழைத்ததில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தாவாச்சொத்துக்களில் எனக்குரிய பாகத்தை பிரித்துக்கொடுக்க மறுத்துவிட்டார்கள்.

8. தாவாச்சொத்துக்களை பொருத்தமட்டில் எனக்கு 1/5 பாகம் பாத்தியமானதாகும். இவ்வாறான நிலையில் தாவாச்சொத்துக்களை இனிமேலும் பொதுவில் வைத்து அனுபவம் செய்வதில் எனக்கு யாதொரு பிரதிபிரயோஜனமும் இல்லை என்பதால் தாவாச்சொத்துக்களை பாகம் செய்துகொள்ளவே நான் விரும்புகிறேன். நான் 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் எனக்குரிய பாகத்தை பிரித்து தரக்கேட்டும் பிரித்துக்கொடுக்காமல் கலகாஸ்பதமாக இருந்து வருகிறார்கள்.

9. தாவாச்சொத்துக்களை பொருத்தமட்டில் எனக்கு பிறப்புரிமையாக 5ல்1 பாகம் பங்கு பாக உரிமையாக கிடைக்க தக்கது என்பதால் தாவாச்சொத்துக்களை பொருத்தமட்டில் பிரிஸ்கிரிப்படிவ் ஆப் டைட்டிலும், பாலன்ஸ ஆப் கன்வீனியன்ஸ்சும் எனக்கே சித்தித்துள்ளது. தாவாச்சொத்துக்களில் எனது பங்கு பாகத்தினை இந்த 1 முதல் 4 பிரதிவாதிகள் பிரித்துதர முன்வராத நிலையில் நான் எனது பங்கு பாகத்தினை பிரித்து தனிமைப்படுத்தாது போனால் எனக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படுவதோடு எனது அமைதியான அனுபவத்திற்கு

கலங்கமும், சலனமும் ஏற்படுவதோடு எனக்கு ஈடு செய்ய இயலாத பேரிழப்பு ஏற்பட்டு போய்விடும். எனவே நான் தாவாச்சொத்துக்களில் எனக்குரிய 1/5 பாகத்தை நயமிளப்பம் (**Meets and Founds**) பார்த்து பிரித்துக்கொடுக்க தக்கதாய் பாகத்துக்கான முதல்நிலை தீர்ப்பாணை பரிகாரம் கோரியும், 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே கடந்த 07.02.2011ம் தேதி ஏற்பட்ட முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 116/2011. 1, 3 பிரதிவாதிகளுக்கு இடையே கடந்த 30.11.2011ம் தேதி ஏற்பட்ட முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 1567/2011. 1, 2 பிரதிவாதிகளுக்கு இடையே கடந்த 13.08.2013ம் தேதி ஏற்பட்ட முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 890/2013 மற்றும் 2, 5 பிரதிவாதிகளுக்கு இடையே கடந்த 26.07.2017ம் தேதி ஏற்பட்ட முதுகுளத்தூர் சார் பதிவக ஆவண எண் 654/2017 ஆகிய மோசடி இனாம் செட்டில்மெண்ட் ஆவணங்கள் செல்லதக்கதல்ல (**Null and Void**) என பரிகாரம் கோரியும் பிரதிவாதிகள் பேரில் சமூகம் நீதிமன்றத்தில் இந்த பிராதை முன்னிடுகிறேன். இப்பால் பிராதுக்குப் பின்னால் காலமாகிவிட்ட 1ம் பிரதிவாதியின் வாரிசாக 7ம் பிரதிவாதி கட்சியாக சேர்க்கப்பட்டு பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனது தரப்பை நிருபணம் செய்ய வா.சா.ஆ. 1 முதல் 7 ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.

வாதி தரப்பு ஆவணங்கள் விபரம்

1) வா.சா.ஆ. 1 - தாவா 1வது லக்கச் சொத்திற்கு 1ம் பிரதிவாதியின் தகப்பனார் குருசாமி ஆசாரி பெயரில் தாக்கலான **G.R.** வீட்டுமனை சிட்டா - நகல்

2) வா.சா.ஆ. 2 கடந்த 21.11.1969ம் தேதி தூவாச்சொத்துக்களை 1ம் பிரதிவாதி, அவரது தந்தை, அவரது சகோதரர்கள் சேர்ந்து எழுதிக்கொண்ட பாகப்பிரிவினை பத்திரம் - **SRO** நகல்.

3) வா.சா.ஆ. 3 கடந்த 13.08.2013ம் தேதி தாவா 1வது லக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி இனாம் செட்டில்மென்ட் பத்திரம் ஆவண எண் 890/2013 - **SRO** நகல்.

4) வா.சா.ஆ. 4 கடந்த 07.02.2011ம் தேதி தாவா 2வது லக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி இனாம் செட்டில்மென்ட் பத்திரம் ஆவண எண் 116/2011 - **SRO** நகல்.

5) வா.சா.ஆ. 5 கடந்த 30.11.2011ம் தேதி தாவா 3வது லக்கச் சொத்தை 1ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி இனாம் செட்டில்மென்ட் பத்திரம் ஆவண எண் 1657/2011 - **SRO** நகல்.

-R. Kalaiselvi

வா.சா.ஆ. 6 கடந்த 26.07.2017ம் தேதி தாவா 1, 2 லக்கச் சொத்துக்களை 2ம் பிரதிவாதி, 5ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த மோசடி இனாம் செட்டில்மெண்ட் பத்திரம் ஆவண எண் 654/2017 - **SRO** நகல்.

7) வா.சா.ஆ. 7 - தாவாச்சொத்துக்களுக்கு கனினி மூலம் பெறப்பட்ட அரசு வழிகாட்டுதல் சொத்து மதிப்பு கனினி நகல்

EX A65 A7
Marked

ஆகையால் சமூகம் கோர்ட்டார் அவர்கள் கிருபை செய்து எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை ஏற்று பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பணிவுடன் பிராத்திக்கப்படுகிறது.

15/6/2

வாதிகள் தரப்பு 1-வது சாட்சி

-R. Kalaiselvi

மேலே கண்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையென்று உறுதி கூறி இன்று முதுகுளத்தூரில் என்முன்பாக கையொப்பம் செய்தார்.

அட்வகேட்
MS 407/99
15.06.202